# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011*, மே மாதம் *06* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *11.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

**2011 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2011 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. கூட். 8/2010

**பின ஒழுங்கமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

"பின ஒழுங்கமைப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்கமைப்பொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட ஒழுங்கமைப்புடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பின ஒழுங்கமைப்பைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பின ஒழுங்கமைப்பு" தற்போதைய உறுப்பினர்களாகவுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்து உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பின ஒழுங்கமைப்பு" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்

கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக அமைத்து உருவாக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) மருத்துவ மனைகளுக்கு நவீன மருத்துவமனை உபகரணங்களை நன்கொடையாக வழங்குதல் ;

(ஆ) உயர்கல்வியை மேற்கொள்வதில் நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு ஊக்கமும் உதவியும் அளித்தல் ;

(இ) குறைந்த வருமானமுள்ள வகுப்பினரைச் சேர்ந்த அல்லது பெற்றோர் ஒருவரை அல்லது இருவரையும் இழந்திருக்கும் மாணவர்களுக்கு உயர் கல்வியை மேற்கொள்வதில் உதவி புரிதல் ;

(ஈ) இருதய சத்திர சிகிச்சை, சிறுநீரக உறுப்பு மாற்றம், புற்றுநோய் சத்திர சிகிச்சை என்பன தேவைப்படும் வறியவர்களுக்கும் அநாதரவானவர்களுக்கும் நிவாரணமளித்தலும் சிகிச்சைகளுக்கு உதவி வழங்குதலும் ;

(உ) அப்போதைக்கு வலுவிலுள்ளவாறான அத்தகைய எழுத்திலான சட்டங்களுக்கிணங்க அநாதை விடுதிகளையும் முதியோர் இல்லங்களையும் தாபித்தலும் பேணுதலும் அத்துடன் சமூக நலம்பேணல் நிலையங்களைத் தாபித்தலும் ;

(ஊ) அப்போதைக்கு வலுவிலுள்ளவாறான அத்தகைய எழுத்திலான சட்டங்களுக்கிணங்க செவிடர், ஊமைகள், குருடர் ஆகியோருக்கும் ஊனமுற்ற ஆட்களுக்கும் நலம்பேணல் வசதிகளை வழங்குதலும் நலம்பேணல் இல்லங்களைத் தாபித்தலும் ;

(எ) வறியவர்களுக்கும் அநாதரவானவர்களுக்கும் சில்லுக் கதிரைகள், ஊன்றுகோல்கள், மூக்குக் கண்ணாடிகள் என்பன வழங்குதல் ;

(ஏ) குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீட்டு நிர்மாணத்தில் அல்லது அதனைப் பூர்த்தி செய்வதில் உதவியளித்தல் ;

(ஐ) விவசாயப் பொறிகள், டிராக்டர்கள், கைடிராக்டர்கள், காணிகள், வாகனங்கள் போன்றவற்றை வழங்குவதன் மூலம் கிராமிய இடப்பரப்புகளில் விவசாய அபிவிருத்தியில் உதவி புரிதல் ;

(ஒ) நூல்கள், பருவஏடுகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் என்பவற்றை அச்சிடுதலும் வெளியிடுதலும் விநியோகித்தலும், வாசிகசாலையை நிர்மாணித்தலும் நடாத்துதலும் ;

(ஓ) அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் எய்துவதற்கும் விருப்பத்தக்கது என கூட்டுத்தாபனம் கருதக்கூடிய பொருட்காட்சிகள், உரையாடல்கள், செயலமர்வுகள், விவாதங்கள், சுற்றுலாக்கள் என்பவற்றை மேம்படுத்தலும், ஒழுங்கு செய்தலும் பேணுதலும் ;

(ஔ) ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு சங்கங்களுடன் அல்லது ஒழுங்கமைப்புகளுடன் ஒத்திசைவாதலும் சேர்ந்து பணியாற்றுதலும் ;

(க) சமுதாயக் கருத்திட்டங்கள் மற்றும் கல்வியறிவு வாயிலாக தற்கொலை மனோபாவங்களைக் குறைத்தலும் ஒழித்தலும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துகையில் அத்தகைய நடைமுறைப்படுத்துகை எவ்வளவுக்கு சாத்தியப்படுமோ அவ்வளவுக்குக் கூடியவரை இனம், மதம், குலம், பால் நிலை, அரசியல் அபிப்பிராயம், பிறந்த இடம் அல்லது அத்தகைய எவையேனுமொரு ஏதுக்களின் அடிப்படையில் பாரபட்சம் எதுவுமின்றி நிறைவேற்றப்படுவதை ஆளும் பேரவை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தலைவரையும், துணைத் தலைவர்களையும் மற்றும் வேறு பதவி தாங்குநர்களையும் கொண்ட ஆளும் பேரவையொன்றினால் (இதனகத்துப்பின்னர் ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்வகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவை இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன்முற்போந்த நாளன்று பதவிவகிக்கும் ஆளும் பேரவையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனமானது பின்வருவன உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான தத்துவங்களை உடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்து மாற்றல் அல்லது வேறு வகையில் பாராதீனப்படுத்தல், பாரபந்தத்திற்குட்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது நிறுவகத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மூலமோ அல்லது முகவர் மூலமோ செய்துகொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும், நன்கொடைகளையும், அன்பளிப்புக்களையும் ஏற்றுக் கொள்ளுதல் ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடு செய்தலும் ஏதேனும் வங்கியில் நடைமுறை, வைப்பு அத்துடன் சேமிப்புக்கணக்குகளைப் பேணுதலும் ;

(உ) கூட்டுத்தாபனம் பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப் பின் மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணத்தை கடனாகப் பெறுதல் அல்லது முதலீடு செய் தல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவை யாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றம் செய்தல், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவி நீக்குதல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. *(1)* ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களை வகுப்பாக்கம் செய்தல், சேர்த்துக் கொள்ளல், அவர்கள் விலகுதல், அவர்களை நீக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், பதவி தாங்கு நர்கள் பதவி விலகுதல், அவர்களைப் பதவியிலிருந்து நீக்குதல் அல்லது அவர்களின் பதவியை வறிதாக்குதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள் மற்றும் கடமைகள்;

(இ) பேரவையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் அத்துடன் அவர்களுடைய தத்துவங்கள், நடத்தைகள், கடமைகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் ;

(உ) பேரவையின் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் தொடர்பான கடைப் பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நிதியின் கட்டுக்காப்பும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப் போன்று அதே போன்ற கூட்டத்தில் அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புகள், கைமாற்றங்கள், அன்பளிப்பு, நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் அல்லது ஏதேனும் நிதிசார் முதலீடுகள் என்ற வகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் கணக்கில் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினம் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்காய்வும் கணக்குகளும்.*

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொருவதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் தலைவரினதும் செயலாளரினதும் அல்லது பேரவையால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளினதும் முன்னிலையிலல்லாது, எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடல் சாட்சிக்காரராக எவரேனும் ஆள் ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

ஒழுங்கமைப்பால் செலுத்தப்படற்பாலதான அல்லது கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன்கள்.

**10.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான ஒழுங்கமைப்பின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று ஒழுங்மைப்பிற்கு வருமதியான எல்லா தனிசுகளும், செலுத்தப்படற்பாலனவான சந்தாப் பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்களது பொறுப்பின் வரையறை.

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புகளையும் செலுத்தித் தீர்க்கும் நோக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்கு அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாகக் கூடியவாறான அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத்தின் தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்துவதற்காளாதலாகாது.

பணங்களினதும் ஆதனத்தினதும் பிரயோகம்.

**12.** கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டவையாக இருப்பினுஞ்சரி, இதன்கண் தரப்பட்டுள்ளவாறு அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவற்றின் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம், இலாபம் அல்லது எவ்விதத்திலாயினுஞ்சரி வேறு வகையில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**13.** கூட்டுத்தாபனமானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் வல்லமையும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க கூட்டுத்தாபனமானது முழுத்தத்துவம் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப் படுவதன் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்தகுறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப் பட்டுள்ளதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடுக்கப் படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது ஒழுங்கமைப்புக்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் போது அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்